# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2019

**ஆண்டு: 10** **திகதி: 23/11/2019**

**நேரம்: 3 மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்: திருமதி. புவனேஸ்வரி புருஷோத்தமர்**

**மாணவர் பெயர்:** ______________________________

| வினாக்கள் | புள்ளிகள் |
|---|---|
| வினா 1 | |
| வினா 2 | |
| வினா 3 | |
| வினா 4 | |
| வினா 5 | |
| வினா 6 | |
| மொத்தப் புள்ளிகள் | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 35 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**கீழ்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்ற பதினெட்டு நூல்கள் ஆகும். இவை பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்று அழைக்கப்படும். சங்க காலத்தைத் தொடர்ந்து வந்த, சங்கமருவிய காலத்தில் எழுந்த நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனப்படும்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஆசாரக்கோவையும் ஒன்று. இது பெருவாயின் முள்ளியார் என்ற புலவரால் இயற்றப்பட்டது. இந்நூல் மனிதன் தன் வாழ்வில் பின்பற்ற வேண்டிய பலவகை ஆசாரங்களைப் (ஒழுக்கங்களைப்) பற்றிக் கூறுகிறது. இந்த ஒழுக்கங்களைப் பற்றிக் கூறும்போது அவற்றின் பின்னணியாக அறிவியலைத் துணைக் கொள்ளும் புலவரின் திறன் சிந்தனைக்குரியது என்று வியக்கின்றனர்.

குறள் வெண்பா, இன்னிசை வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா, சவலை வெண்பா, ப.்.றொடை வெண்பா என்று பல்வேறு வெண்பா வகைகளைக் கொண்ட நூறு பாடல்களால் ஆனது இந்த ஆசாரக்கோவை. ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு விடயம் தொடர்பான ஒழுக்கத்தை எடுத்துக் கூறுகிறது. நித்திரை விட்டு எழுந்து, காலைக்கடன் முடித்துப் பல் துலக்கி முகம் கழுவுவது தொடக்கம் நீராடுதல், ஆடையணிதல், உணவு உண்ணல், நித்திரை செய்தல் என்று ஒவ்வொரு விடயத்திலும் செய்யவேண்டியவை செய்யக்கூடாதவை என்று பிரித்துக் கூறுவதைக் காணலாம்.

உணவு உண்ணும்போது நன்கு அமர்ந்து, வேறொன்றையும் பார்க்காமல், எதையும் தேவையின்றிப் பேசாமல், உணவைக் கையால் எடுத்து உண்ணல் வேண்டும் என்று பெருவாயின்முள்ளியார் கூறுகிறார். அத்துடன் படுத்தபடியும் நின்றவண்ணமும் கட்டிலின்மேல் அமர்ந்தும் வெட்டவெளியில் இருந்தும் உண்ணக் கூடாது என்கிறார். ஒருநிலையில் அமர்வது உடல் உறுப்புக்களின் சமநிலைப்பாட்டைச் சுட்டுகிறது. உடலும் மனமும் ஒத்திருக்கும் நிலையில் நன்கு மென்று உண்ணும் உணவே சிறந்தது, செரிமானத்துக்குரியது என அறிவியலும் ஆன்மிகமும் குறிப்பிடுவதைத்தான் ஆசாரக்கோவை ஆசிரியர் ஒழுக்கமாகக் குறிப்பிடுகிறார்.

உணவை எந்த ஒழுங்கில் உண்ணவேண்டும் என்றும் சொல்கிறார். இனிப்பான உணவை முதலிலும் கசப்பான உணவை இறுதியிலும் ஏனைய சுவையுள்ள உணவுகளை அவற்றிற்கிடையிலும் உண்ண வேண்டும் என்கிறார். அத்துடன்

வீட்டில் முதலாவதாக விருந்தினர்களுக்கு உணவு பரிமாற வேண்டும். அடுத்தது வீட்டிலுள்ள மூத்தோர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும். பின் பசுக்களுக்கும் கூட்டில் வளர்க்கின்ற பிராணிகளுக்கும் குழந்தைகளுக்கும் வழங்கியபின் தாய் உண்ண வேண்டுமென்று சொல்கிறார்.

நன்றியறிதல், பொறுமை, இன்சொல்பேசுதல், எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாமை, கல்வியுடைமை, தயாளகுணம், அறிவுடைமை, நல்லவர்களுடன் நட்புறவு ஆகிய எட்டும் ஒழுக்கத்திற்கு அடிப்படையாகும் என்று முதலாவது பாடல் கூறுகிறது. நூறாவது பாடல் யார்யாருக்கு ஆசாரக் கட்டுப்பாடு இல்லையென்று சொல்கிறது. அந்நிய தேசத்தவன், வறியவன், வயதுபோனவர், சிறுவன், உயிரிழந்தவன், பயந்தவன், உண்பவன், அரசன் தொழிலை மேற்கொண்டவன், மணமகன் ஆகிய ஒன்பதுபேரும் ஒழுக்கக் கட்டுப்பாடு அற்றவர்கள் என்று வரையறை செய்கிறது.

1. பதினெண்மேற்கணக்கு நூல்கள் எவை? (1 புள்ளி)
   பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எவை? (1 புள்ளி)

   ________________________________________________________________

   ________________________________________________________________

2. ஆசாரக்கோவை நூலைப் பாடிய புலவர் யார்? (1 புள்ளி)

   ________________________________________________________________

3. ஆசாரக்கோவை எதைப்பற்றிக் கூறுகிறது? (2 புள்ளி)

   ________________________________________________________________

   ________________________________________________________________

   ________________________________________________________________

4. ஆசாரக்கோவை எவ்வகை வெண்பாக்களால் ஆனது? (2 புள்ளி)

   ________________________________________________________________

   ________________________________________________________________

   ________________________________________________________________

5. உணவு உண்ணும்போது செய்யவேண்டியவை, செய்யக்கூடாதவை எவையென ஆசாரக்கோவை ஆசிரியர் சொல்கிறார்? (4 புள்ளி)

6. உணவு உண்பது தொடர்பாக அறிவியல் என்ன சொல்கிறது? (3 புள்ளி)

7. உணவை என்ன ஒழுங்கில் உண்ண வேண்டுமென்று கண்டீர்? (3 புள்ளி)

8. வீட்டிலுள்ளோருக்கு உணவு பரிமாறும் ஒழுங்குபற்றி என்ன சொல்லப்பட்டுள்ளது? (3 புள்ளி)

9. ஒழுக்கத்தை வளர்த்தெடுக்கும் அடிப்படைகள் எவையெனக் கண்டீர்? எத்தனையாவது பாடல் இதனை விபரிக்கிறது? (5 புள்ளி)

10.நூறாவது பாடல் என்ன சொல்கிறது? அது பொருத்தமானது என்று கருதுகிறீரா? (5 புள்ளி)

11.ஆசாரக்கோவை உமக்கு வழிகாட்டுமா? உதவுமா? உமது கருத்தைப் பந்தியிலிருந்து ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி விளக்குக. (5 புள்ளி)

- BLANK PAGE -

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் கவிதையை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!
ஊமையராய்ச் செவிடர்களாய் குருடர்களாய்
வாழ்கின்றோம், ஒரு சொற்கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்! - பாரதியார்

1. பாரதியார் போற்றுகின்ற புலவர்கள் யாவர்? (3 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

2. "உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை" என்று கூறுவதன் மூலம் பாரதியார் எதைத் தெளிவுபடுத்துகிறார்? (2 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

3. நாம் எப்படி வாழ்கிறோம் என்று பாரதியார் கவலையுடன் கூறுகிறார்? (3புள்ளி)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

4. சேமம் உற வேண்டுமானால் என்ன செய்ய வேண்டுமென்று பாரதியார் நமக்குக் கூறுகிறார்? (2 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**கடிதம் எழுதுதல்**

உமது பிரதான பாடசாலை, வேலை அனுபவ வாரம் நவம்பர் 25ம் திகதி முதல் 29ம் திகதி வரை என்று அறிவித்துள்ளது. அதன்படி நீர், உமது வீட்டிற்கு அண்மையிலுள்ள தனியார் மருத்துவ மையத்தில் வேலை அனுபவம் பெற விரும்புகிறீர். அதற்கான விண்ணப்பக் கடிதத்தை 75-80 சொற்களில் எழுதுக.

- முகவரி: தலைமை மருத்துவர், ஹோம்புஷ் மருத்துவ நிலையம்
- விடயம்: வேலை அனுபவத்திற்கான விண்ணப்பம்

(கடித அமைப்பு, பேணப்பட வேண்டும்)

| வினா இல | 4 | புள்ளிகள் | 20 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

**கட்டுரை எழுதுதல்**

தரப்பட்டுள்ளவற்றுள் ஒன்றைத் தெரிந்து 175-200 சொற்களுக்கமைய எழுதுக.

1. "புலம்பெயர் வாழ்க்கையால் எமது சமூகம் பெற்றதும் இழந்ததும்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.
2. நெகிழிப் பாவனைபற்றிய விழிப்புணர்வு இன்று அதிகரித்துள்ளது. நெகிழிப் பாவனையைக் குறைக்க, உமது ஆலோசனைகளைத் தொகுத்துக் கட்டுரையாக எழுதுக.
3. "இன்றைய எமது சமூகத்தில் தலைமுறை இடைவெளி" என்ற தலைப்பில் தமிழ்ப் பாடசாலைத் தகவல் தினத்தில் நீர் ஆற்றவுள்ள பேச்சின் உரை வடிவத்தை எழுதுக.

கட்டுரைக்கு வேண்டிய குறிப்புகளை இங்கே எழுதவும்.

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 12 |
|---|---|---|---|---|---|

**கேட்டுக்கிரகித்தல்.**

1. தொலைபேசியில் உரையாடியவர்கள் யாவர்? (2 புள்ளி)

________________________________________________

________________________________________________

2. தொலைபேசியில் அழைத்தவர் எங்கே நிற்கின்றார்? (1 புள்ளி)

________________________________________________

________________________________________________

3. தொலைபேசியில் அழைத்தவர் கூறிய செய்தி என்ன? (5 புள்ளி)

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

4. ஒரே நாளில் காலநிலையில் ஏற்பட்ட மாற்றம் என்ன? (2 புள்ளி)

________________________________________________

________________________________________________

________________________________________________

(இங்கே குறிப்பு எடுக்கவும்)

| வினா இல | 6 | புள்ளிகள் | 10 | பக்கம் | 13 |
|---|---|---|---|---|---|

**கேட்டுக்கிரகித்தல்.**

1. யார், யாரைப் பாராட்டி வாழ்த்துக் கூறுகிறார்? (2 புள்ளி)

______________________________________________________________

______________________________________________________________

2. தாத்தாவிடம் இருந்து கற்றுக்கொண்ட மனப்பழக்கங்கள் எவையென நிமலன் கூறுகிறார்? (2 புள்ளி)

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

3. தாத்தாவிற்குக் கிடைத்த பாதகமான 3 அனுபவங்கள் எவை? (3 புள்ளி)
   தாத்தா அவற்றிலிருந்து கண்ட நன்மையான விடயங்கள் எவை? (3 புள்ளி)

   1. ______________________________

   ______________________________________________________________

   ______________________________________________________________

   ______________________________________________________________

   2. ______________________________

   ______________________________________________________________

   ______________________________________________________________

   ______________________________________________________________

   3. ______________________________

   ______________________________________________________________

   ______________________________________________________________

   ______________________________________________________________

(இங்கே குறிப்பு எடுக்கவும்)